இனிமையான குழந்தைகளே ! பாபா புதிய உலகத்திற்காக புதிய ஞானத்தை உங்களுக்குக் கொடுக்கின்றார். அதன் மூலமாக சூரிய வம்சத்தின் குலம் உருவாகிறது. அந்த குலத்திற்கு நீங்கள் இப்பொழுது அதிபதியாகிக் கொண்டு இருக்கின்றீர்கள்.

கேள்வி: எந்த விஷயத்தில் நிச்சயம் இருந்தால் ஆஸ்திக்கு அதிகாரியாக எளிதாக மாற முடியும்?

பதில்: எல்லையற்ற அதே தந்தை சொர்க்கத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறார் என்ற நிச்சயம் முதன் முதலில் இருக்கட்டும். வேலை தொழில் போன்றவைகளை செய்து கொண்டு இருந்தாலும் நாம் அந்த பாபாவின் குழந்தைகள் என்ற நினைவு இருக்கட்டும். நாம் சொர்க்கத்திற்கு அதிபதி ஆகிறோம் என்றால் அளவற்ற குஷி இருக்கும். மேலும் எளிதாக ஆஸ்திக்கு அதிகாரி ஆகலாம். உறுதியான நிச்சயம் உடையவர்க்கு அளவற்ற குஷியின் அளவு அதிகரித்துக் கொண்டே யிருக்கும். ஒருவேளை குஷி இல்லை என்றால் எனக்கு ஒரு நயா பைசா அளவிற்குக் கூட நிச்சயம் இல்லை என்று புரிந்து கொள்ள வேண்டும்.

பாடல்: எந்த நாளிலிருந்து நீங்கள் எங்களை சந்தித்தீரோ........

ஓம் சாந்தி. இது யாருடைய மகிமை? பரம்பிதா பரமாத்மா. அவருக்கு பரந்தாமத்தில் வசிக்கக்கூடிய பரமபிரிய பரம்பிதா பரமாத்மா என்று கூறப்படுகிறது. நீங்கள் அனுபவி குழந்தைகள். பரம்பிதா பரமாத்மா உங்களை அவருடையவராக மாற்றிக் கொண்டார். பிறகு குழந்தைகளாகிய நீங்கள் பரம்பிதா பரமாத்மாவை உங்களுடையவராக ஆக்கிக் கொண்டீர். பரம் என்றால் எல்லாவற்றையும் கடந்தவர். உண்மையில் ஆத்மாக்களாகிய நாம் பரந்தாமத்தில் பரம்பிதா பரமாத்மாவுடன் வசிக்கக் கூடியவர்கள் என்பது ஆத்மாவிற்கு புத்தியில் புரிகிறது. உலகத்தில் வேறு யாருக்கும் இந்த ஞானம் இல்லை. அவர்கள் தன்னையே பரமாத்மாவின் ரூபம் என நினைக்கிறார்கள் என்றால் எந்த ஞானமும் இல்லை. அந்த பரம்பிதா பரமாத்மா வரும் பொழுது புதிய உலகத்திற்காக புதிய ஞானத்தைக் கூறுகின்றார். புதிய உலகத்தில் புதிய நாள், புதிய இரவு இருக்கிறது. பழைய உலகத்தில் பழைய நாள், பழைய இரவு இருக்கிறது. மேலும் பலவிதமான துக்கம் நிறைய இருக்கிறது. அதிகப்படியாக துக்கம் தான் இருக்கிறது. இரவில் காம விகாரத்தில் ஈடுபடுகிறார்கள். பகலில் பாவங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள். புதிய உலகத்தில் எப்பொழுதும் சுகமே சுகம் இருக்கிறது. இது நிச்சயமாக புத்தியில் இருக்கும். புது உலகத்தில் சூரிய வம்சத்தில் இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் இருக்கிறது. இளவரசன் இளவரசியின் இராஜ்யம் இருக்கிறது என்று சொல்ல மாட்டார்கள். இராஜா இராணியின் இராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் சத்யுகத்தில் லட்சுமி நாராயணனின் வம்சம் இருக்கிறது. சொர்க்கமாக இருப்பதால் நிறைய சுகம் இருக்கிறது. அந்த சுகத்தை அடைய நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். அது தூய்மையான இராஜ்யம் ஆகும். அந்த புதிய உலகத்திற்கு அதிபதியாக்குவதற்காக பாபா உங்களை முயற்சி செய்ய வைத்துக் கொண்டு இருக்கின்றார். அச்சமயம் உலகத்தில் வேறு எந்த இராஜ்யம், தர்மம் இருக்காது. யாருக் காவது புரிய வைக்கின்றீர் என்றால் இது உண்மையான விஷயம் என்று

எழுத வையுங்கள். அடிக்கடி ரிவைஸ் செய்ய வைப்பதால் புதிய உலகத்தில் உண்மையில் இராஜா இராணியைப் போன்றே பிரஜைகளும் தூய்மையாக இருக்கிறார்கள், எப்பொழுதும் சுகமாக இருக்கிறார்கள் என்ற நிச்சயம் ஏற்படும் இப்பொழுது சதா துக்கத்தில் இருக்கிறார்கள். கலியுகத்தின் கடைசியில் எப்படி இருக்கிறது. மேலும் சத்யுகத்தின் ஆரம்பத்தில் எப்படி இருக்கும்? இன்று என்ன? நாளை என்ன நடக்கும்? என்பது சங்கம யுகத்தில் ஒப்பிடப்படுகிறது. இப்போது எல்லையற்ற இரவு முடியப் போகிறது. மீண்டும் நாளை பகலில் இராஜ்யம் செய்கிறீர்கள். இன்று அழுக்கான உலகமாக இருக்கிறது. நாளை தூய்மையான உலகமாக இருக்கும். பதீத பாவன சீதாராம்....... என சாது சந்நியாசிகள் அனைவரும் பாடுகிறார்கள். அவர்களிடம் எப்போது பார்த்தாலும் இவ்வாறு பாடு கிறீர்கள், தாங்கள் பதீத பாவனர் என்று யாரை நினைக்கிறீர்கள் என கேட்க வேண்டும். அழுக்காக இருப்பது யார்? தூய்மையாக மாற்றுபவர் யார்? அழுக்கான உலகம் மற்றும் தூய்மையான உலகம் எப்படி இருக்கிறது? அழுக்கானவர்களை தூய்மையாக மாற்றக்கூடியவர் வருகிறார் என்றால் நிச்சயமாக தூய்மையான உலகத்திற்குத் தான் அழைத்துச் செல்வார். கலியுகத்தின் முடிவை அழுக்கான உலகம் என்றும், சத்யுகத்தின் ஆரம்பத்தை தூய்மையான உலகம் என்றும் கூறப்படு கிறது. அதைத் தான் அனைவரும் நினைக்கிறார்கள். சொர்க்கம் தான் தூய்மையான உலகம் ஆகும். எனவே நிச்சயமாக சொர்க்கத்தை உருவாக்கக்கூடியவர் நிராகாரர் பரம்பிதா பரமாத்மா தான். தூய்மையான உலகத்தை சொர்க்கத்தை படைக்கக் கூடியவர் பரம்பிதா பரமாத்மாவே ஆவார். நரகத்தை படைக்கக்கூடியவருக்கு (இராவணன்) மகிமைகள் கிடையாது. அவனை எதிர்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். மனிதர்கள் அறியவில்லை. இராவணன் என்று மட்டும் பெயர் வைத்து விட்டனர். இவரைப் போன்று மனிதன் யாரும் இருக்க முடியாது. மனிதர்கள் மறுபிறவி எடுக்கிறார்கள். பெயர் ரூபம் மாறிக்கொண்டே போகிறது. இராவணனின் பெயர் ரூபம் ஒருபோதும் மாறுவதில்லை. இந்த பத்து தலைகள் இருந்து கொண்டேயிருக்கிறது. நாளுக்கு நாள் அரை அடி நீளமாக உருவாக்குகிறார்கள் என்றால் இப்பொழுது பெரியவனாகிக் கொண்டே போகிறான். தமோபிர தானமாகி விட்டான். ஆகவே அவனை எரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். பதீதமாக யார் மாற்றுகின்றார்கள் என இப்பொழுது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். இந்த 5 விகாரங் களுக்குத் தான் இராவணன் என்று கூறப்படுகிறது. இதுவே துக்கம் அளிக்கிறது. அழுக்காக மாற்றுகிறது. எனவே இந்த விகாரங்களை விட வேண்டும் அல்லவா? சாது சந்நியாசி போன்றோர் இந்த விகாரங்களைத் தான் தானமாக பெறுகிறார்கள். நல்லது. பொய் பேசுவதை எங்களுக்கு கொடுத்து விடுங்கள் என்கிறார்கள். பெரும்பாலும் காம விகாரத்தைப் பொருத்த வரை வாரத்தில் ஒரிரு முறை ஈடுபடுங்கள் என்கிறார்கள். ஆனால் இங்கேயோ 5 விகாரங்களின் விஷயம் ஆகும். ஒரு திருடனைப் பிடித்தால் பிறகு இன்னொரு திருடன் திருட ஆரம்பிக்கின்றான். இதை யாருக்கு வேண்டுமானாலும் புரிய வைப்பது மிக எளிதாகும். பதீத ஆத்மா, மகான் ஆத்மா என கூறப் படுகிறது. பதீத பரமாத்மா, மகான் பரமாத்மா என கூறப்படுவதில்லை. எனவே தூய்மையாக யார் மாற்றுவார்? நிச்சயமாக பகவான் தான் என்று காண்பிப்பார்கள். பார்வை மேலே போகும். நல்லது. அவர் எப்போது வருவார்? அவருடைய பெயர் என்ன?. பாரதத்தில் சிவஜெயந்தி பிரசித்தமாக இருக்கிறது. அவருடைய பெயரே சிவன் ஆகும். வேறு எந்தப் பெயரும் கொடுப்பதில்லை. புத்தியில் லிங்கத்தின் தோற்றம் வருகிறது.

சோம்நாத் என்று கூறினாலும் கூட புத்தியில் லிங்கம் தான் வருகிறது.

பரமாத்மாவும் நம்மைப் போன்றே நட்சத்திரமாக இருக்கிறார் என்று உங்களுடைய ஆத்மா அறிகிறது. இந்த நட்சத்திங்களை தேவதை என்றும் கூறுகின்றார்கள். நட்சத்திர பகவான் என்று கூறுவதில்லை. நீங்கள் நட்சத்திரங்கள் ஆவீர். உங்களை பகவான் என்று கூற முடியாது. பரமாத்மா பிந்துவாக இருக்கின்றார். அதனால் எப்படி பூஜை செய்வது? எனவே பக்தி மார்க்கத்தினர் லிங்க ரூபமாக உருவாக்கியிருக்கின்றார்கள். இவ்வளவு பெரிய பொருள் எதுவும் இல்லை. ஆத்மா சிறியதாகவோ, பெரியதாகவே ஆவதில்லை. எனவே அதை பெரியதாக உருவாக்குவதும் கூட தவறாகும். நிறைய மனிதர்களுக்கு பரமாத்மாவின் யதார்த்தமான ஞானம் இல்லை. இது மிகவும் நுணுக்கமான விஷயம் ஆகும். ஒரேயடியாக சிறிய புள்ளியாக இருந்தால் அவரை எப்படி நினைவு செய்வது என்கிறார்கள். அடே! ஆத்மா தனது தந்தையை நினைப்பது மிகவும் எளிதாகும். பாபாவின் மகிமைகள் தனிப்பட்டதாகும். ஆத்மா ஒன்று போல தான் இருக்கிறது. ஆத்மாவில் தான் நல்ல, கெட்ட, உயர்ந்த, தாழ்ந்த சம்ஸ்காரங்கள் இருக்கிறது. ஆத்மாவில் தான் ஞானம் இருக்கிறது. ஆத்மா எவ்வளவு சிறியதாக இருக்கிறது! மனிதர்கள் ஏழையாகவும் பணக்காரராகவும் அந்த ஆத்மாவின் சம்ஸ்காரத்திற்கு ஏற்ப மாறுகிறார்கள். இப்போது குழந்தைகளாகிய உங்களது புத்தியில் இந்த ஞானம் முழுவதும் இருக்கிறது. மனிதர்கள் பரமாத்மாவை அறிய வில்லை. இதனால் ஆத்மாவைப் பற்றிய ஞானம் இல்லை. ஈஸ்வரனை சர்வ வியாபி என தலை கீழாக நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். ஆத்மா தான் இது அனைத்தையும் தாரணை செய்கிறது. ஆத்மா தான் ஒரு உடலை விட்டு, இன்னொரு உடலை சம்ஸ்காரத்திற்கு ஏற்ப எடுக்கிறது. இதை ஆத்மா பேசுகிறது. மனிதர்கள் தன்னை மனிதன் என நினைத்துப் பேசுகிறார்கள். இங்கே தன்னை ஆத்மா என நினைக்க பயிற்சி செய்ய வேண்டியிருக்கிறது. ஆத்மாக்களாகிய நம்மை பரம்பிதா பரமாத்மா படிக்க வைக்கின்றார். மனிதர்களோ ஆத்மா வில் எதுவும் ஒட்டாது எனக் கூறுகிறார்கள். ஒரு வேளை எதுவும் ஒட்டாது என்றால் சம்ஸ்காரம் எதில் பதிவாகிறது. மிகவும் குழப்ப மடைந்திருக்கின்றனர். புதிய உலகத்திற்கான புதிய ஞானம் பாபா தான் கொடுக்க வேண்டும். பழைய உலகத்தில் வசிக்கக்கூடிய மனிதர்கள் கொடுக்க முடியாது. எனவே பாபாவை அறிந்து கொள்ள வேண்டும் அல்லவா, பக்தர்கள் பகவானிடமிருந்து ஆஸ்தி அடைய வேண்டும். பக்தியும் நடந்து கொண்டு தான் வருகிறது. கல்லிலும், முள்ளிலும் பகவானைத் தேடிக் கொண்டு இருக்கின்றார்கள். அனைவருமே பரமாத்மாவின் ரூபம் என்று நினைக்கிறார்கள். உண்மையில் அனைவரும் சகோதரர்கள் ஆவர். இலட்சுமி நாராயணன் முதற்கொண்டு மனிதர்கள் வரை அனைவரும் சகோதரர்களே ஆவர் அல்லது சகோதரன் சகோதரி ஆவர். ஏனென்றால் பிரஜா பிதா பிரம்மாவின் வாரிசுள் ஆவர். சிவனின் வாரிசுகள் என்றால் நிராகார ஆத்மாக்களாவர். பிரம்மாவின் குழந்தைகள் உடலில் இருப்பதால் சகோதரன், சகோதரி ஆகிறார்கள். ஆனால் குடும்ப விவகாரத் தில் வரும் பொழுது சகோதரன், சகோதரி என்ற உறவை மறந்து விடு கிறார்கள். ஒரு வேளை அந்த ஞானம் இருந்தால் விகாரத்தில் கூட ஈடுபட மாட்டார்கள். நீங்கள் விகாரத்தில் ஈடுபடாதீர்கள். இப்பொழுது மீண்டும் பாபா புரிய வைக்கின்றார். நீங்கள் ஒரு தந்தையின் குழந்தைகள் சகோதரன், சகோதரி ஆவீர். இப்பொழுது பிரம்மா எதிரில் இருக்கிறார். நீங்கள் அவருடைய குழந்தைகள் பி.கே ஆவீர். இது

இல்லறத்தில் இருந்து கொண்டே தூய்மையாவதற்கான யுக்தியாகும். ஜனகரின் எடுத்துக் காட்டும் இருக் கிறதல்லவா! முதலில் பாபா சொர்க்கத்தைப் படைப்பதற்காக வந்திருக் கிறார் என்று ஒவ்வொரு விஷயத்திலும் நிச்சயம் உண்டாக வேண்டும். அவ்வளவு தான் இந்த அம்பு பாய்ந்துவிட்டால் உடனே பாபாவினுடையவராக மாறிவிடுவார்கள். ற

நீங்கள் என்னுடையவர் ஆகிவிட்டால் நான் உங்களை சொர்க்கத்திற்கு அதிபதியாக மாற்றி விடுவேன் என்று பாபா கூறுகின்றார். இவர் அதே எல்லையற்ற தந்தை என்ற நிச்சயம் வேண்டும். நாம் நிச்சயமாக சொத்தை அடைவோம். மன்மனாபவ, மத்யாஜிபவ, எவ்வளவு எளிதான விஷயம். வேலை தொழில் போன்றவை களை செய்தாலும் நாம் பாபாவினுடைய குழந்தைகள் என்ற நினைவு இருக்க வேண்டும். நாம் சொர்க்கத்திற்கு அதிபதியாகிறோம் என்றால் குஷியிருக்கும். இது 84 பிறவிகளின் சக்கரம் ஆகும். சூரிய வம்சத்தின் தேவி தேவதைகள் மட்டுமே 84 பிறவிகளை எடுக்கிறார்கள். நாம் சுயதரிஷன சக்கரதாரி என நீங்கள் அறிவீர்கள். வெறுமனே சக்கரம் என்பதால் பிறவிகள் தெளிவாவ தில்லை. ஆகவே நாம் 84 பிறவிகளைப் பற்றி அறிந்து சுயதரிஷன சக்ரதாரி என கூற வேண்டும். அப்போது தந்தையும் நினைவிற்கு வருவார். 5 யுகங்களும் நினைவிற்கு வரும். இப்போது மீண்டும் சொர்க்கத்திற்கு போகிறேன். நம்முடைய 84 பிறவிகள் முடிந்து விட்டது. புத்தியில் சக்கரம் சுழன்று கொண்டேயிருக்கட்டும். மேலும் சரீர நிர்வாகத்திற்காக வேலையும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். சுயதரிசன சக்கரத்தைப் பற்றிய ஞானத்தை என்னுடைய பக்தர்களுக்கு அளியுங்கள் என பாபா கூறியிருக்கிறார். அவர்களுக்குப் புரிய வைத்தால் நாம் தான் 84 பிறவிகளை எடுக்கின்றோம் என்ற நிச்சயம் உடனே வந்துவிடும். 84 பிறவிகள் எடுக்காதவர்கள் என்றால் அவர்களுக்கு தாரணையும் ஆகாது. 84 பிறவிகளின் பொருள் முதன் முதலில் நாம் சூரிய வம்சத்திற்கு வருவோம். சிறிதளவு யாராவது கேட்டு விட்டுச் சென்றாலும் கூட நிச்சயமாக சொர்க்கத்திற்கு வருவார்கள். ஆனால் 84 பிறவிகளை எடுக்க மாட்டார்கள். தாமதமாக வரலாம். பிறகு அவர்கள் 84 பிறவிகள் எடுக்க முடியாது. இந்த ஞானத்தில் எவ்வளவு ஆழமான விஷயங்கள் இருக்கின்றது. எவ்வளவு கணக்கு வழக்கு இருக்கின்றது. சரி இவ்வளவு ஆழமான விஷயங்கள் புரியவில்லை என்றால் பாபா வினுடையவராகி ஆஸ்தியை அடையுங்கள் என்று பாபா கூறுகின்றார். நாம் சிவபாபாவின் குழந்தைகள் அவர் சொர்க்கத்தை படைக்கக்கூடியவர் என்ற இந்தப் பெருமிதம் இருக்க வேண்டும். ஆனால் மாயை இருக்க விடுவதில்லை. அப்பா மற்றும் ஆஸ்தியை நினைப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. மாயை நம்மை என்ன செய்யும். நிச்சயமாக நாங்கள் ஆஸ்தி அடைவோம் எவ்வளவு எளிதான விஷயம் என சிலர் கூறுகின்றார் கள். யாருக் காவது அம்பு பாய்ந்துவிட்டால் அப்பா மற்றும் ஆஸ்தியை நினைவு செய்து மிகுந்த குஷியில் இருப்பார்கள். குஷி வரவில்லை என்றால் நயாபைசா அளவிற்குத்தான் நிச்சயம் உடையவர் என பாபா கூறுவார். உறுதியான நிச்சயம் உடையவர்களுக்கு முயற்சியின் அளவு மிகவும் அதிகரிக்கிறது. எந்த அரசருக்காவது வாரிசு இல்லை என்றால் யார் முதலில் கோட்டைக் குள் வருகிறாரோ அவரை தத்தெடுப்போம் என்று கூறுவார். பிறகு நீண்ட வரிசை நிற்க ஆரம்பிக் கிறது. மேட்சிலும் நீண்ட வரிசை நிற்கிறது. பால் பாட்டில் வாங்கும் இடத்திலும் நீண்ட வரிசை நிற்கிறது. முதல் நம்பரில் வருவதற்காக அதிகாலையில் எழுந்து சென்று நிற்கிறார்கள். இல்லை

என்றால் பிறகு காத்திருக்க வேண்டியிருக்கும். இங்கேயோ பாபாவின் கழுத்து மாலையில் வருவதற்கு நீண்ட வரிசை இருக்கிறது. அனைத்திற்கும் ஆதாரம் முயற்சியாகும். பாபாவை நினைக்க வேண்டும். இது புத்தியின் ஓட்டப்பந்தயம். வேலை போன்றவைகளை செய்து கொண்டே யிருங்கள். ஆத்மாவின் மனம் நினைக்க வேண்டும். கை வேலை செய்ய வேண்டும்...... பிரியதர்ஷன் பிரியதர்ஷினி ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க மாட்டார்கள். வேலை போன்றவை களை செய்து கொண்டே புத்தி அவர் களிடத்தில் போகின்றது. இங்கேயோ புத்தி நம்மை சொர்க்கத்திற்கு அதிபதியாக மாற்றக் கூடிய ஒருவரிடத்தில் இருக்க வேண்டும். எந்த நேரம் எப்போது கிடைத்தாலும் அதில் முயற்சி செய்ய வேண்டும். இல்லற விவகாரங்களில் இருக்க வேண்டும். இது ஒன்றும் கர்ம சந்நியாசம் இல்லை. சரீர நிர்வாகமும் செய்ய வேண்டும்.

இப்போது பாபா பிரம்மாவின் உடலில் வந்து, நான் உங்களுடைய தந்தை, நான் உங்களை சொர்க்கத்திற்கு அதிபதியாக மாற்றுகின்றேன் என்று கூறுகின்றார். நீங்கள் என்னை உங்களுடைய வராக மாற்றிக் கொள்ளமாட்டீர்களா? என்னுடையவர் ஆகிவிட்டீர்கள் என்றால் இப்பொழுது என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். என்னுடையவர் ஆன பிறகு நீங்கள் தூய்மையாகவில்லை,. பெயரைக் கெடுத்தீர்கள் என்றால் நிறைய தண்டனை அடைவீர்கள். சத்குருவிற்கு நிந்தனை வரும் படி நடப்பவர்கள் சொர்க்கத்தின் வாயிலுக்குப் போக முடியாது. நல்லது.

பாப்தாதா, தாய் தந்தையிடமிருந்து சொர்க்கத்தின் சதா சுகத்தை அடைபவர்களுக்கு, சுயதரிஷன சக்கரதாரியாகி இராஜ்ய பாக்கியத்தை அடைபவர்களுக்கு, பாப்தாதாவின் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்ல குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகத் தந்தைக்கு ஆன்மீகக் குழந்தைகளின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாபாவின் கழுத்து மாலை ஆகவேண்டும் என்றால் புத்தியின் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட வேண்டும். நினைவு யாத்திரையின் ஓட்டப்பந்தயத்தில் ஓட வேண்டும்.

2. சரீர நிர்வாகத்திற்காக வேலைகளை செய்தாலும் சுயதரிசனசக்கரத்தை சுழற்ற வேண்டும். ஒரு போதும் சத்குருவிற்கு நிந்தனையாளர் ஆகக்கூடாது. பெயரை, கெட்ட பெயர் ஆக்கும்படியான கர்மம் எதுவும் செய்யக்கூடாது.

வரதானம் : தன்னிடம் மீதமுள்ள உடல், மனம், பொருளை ஈஸ்வரிய காரியத்தில் பயன்படுத்தி சேமிக்கக் கூடிய சதா சகயோகி ஆகுக.

கோவர்தன மலையை தூக்குவதற்காக ஒவ்வொருவரின் விரலையும் (சுண்டு) நினைவு சின்னமாக காட்டப்படுகிறது. இது உங்களின் நினைவு சின்னத்தின் அடையாளம் ஆகும். சித்திரத்தில் பாபாவோடும் காட்டப்படுகிறது. சேவையும் காட்டப்படுகிறது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் பாப்தாதாவின் சகயோகியாக (உதவியாளராக) ஆகும்பொழுது நினைவு சின்னமாக ஆகிவிடுகிறது. பக்தியில் உடல், மனம், பொருள் என்னவெல்லாம் பயன்படுத்தினோமோ, அதில் 99% இழந்து விட்டோம். மற்றபடி மீதமிருப்பது 1% தான், அதை இப்பொழுது உண்மையான மனதோடு

ஈஸ்வரிய காரியத்தில் பயன்படுத்துவதால் மீண்டும் பலமடங்கு சேமிப்பு ஆகிவிடும்.

சுலோகன்: யார் நிமித்தமாக ஆகிறார்களோ, அவர்களுக்கு அனைவருடைய மரியாதையும் தானாகவே கிடைத்துவிடும்.